**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**ஆறாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2014**

**D061 இலக்கியத் திறனாய்வு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தஞ்சைத் தரணியை மையம் கொண்டு புதினம் எழுதியவர் யார்?
2. இலக்கியத்தின் பாடுபொருள் எது?
3. புலன்களுக்கு வசப்படும் பொருளை எவ்வாறு குறிப்பர்?
4. முத்தமிழில் நடுநாயகமாகத் திகழ்வது எது?
5. நெடுநல்வாடை அகமா புறமா என்ற கேள்வியை எழுப்பிய உரையாசிரியர் யார்?
6. கம்பனை வால்மீகியுடனும் மில்டனுடனும் ஒப்பிட்டவர் யார்?
7. ரசிகமணி என்று போற்றப்பட்டவர் யார்?
8. தொல்காப்பியர் கூறும் செய்யுள் உறுப்புக்கள் எத்தனை?
9. இறையனார் அகப்பொருளுக்குச் சிறப்பான உரை சொன்னவர் யார்?

10. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் தலையாய நூலாகக் கருதப்படுவது எது?
11. தமிழ் எழுத்தும் சமற்கிருத எழுத்தும் கலந்த நடை எது?
12. அருட்பாவை மருட்பா என்று குறிப்பிட்டவர் யார்?
13. சிற்றிலக்கியங்களுக்குள் தலித்துகளுக்கு உரிய இலக்கியமாகக் கருதப்படுவது எது?
14. 'பின்னை' என்பது எப்பொருளை உட்கொண்டிருக்கிறது?
15. கம்யூனிசம் என்பதன் தமிழாக்கம் என்ன?

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. திறனாய்வு இலக்கியமா? – விளக்குக.
2. திறனாய்வாளரையும் வாசகனையும் ஒப்பிடுக.
3. மொழியும் மொழியியலும் பற்றி விளக்குக.
4. சிலப்பதிகாரம் காட்டும் கூத்துக் கலை குறித்து எழுதுக.
5. பாராட்டு முறைத் திறனாய்வின் எல்லை எது?
6. கவிதையில் அழகியலின் பங்கு யாது?
7. தமிழிலக்கியங்களில் தத்துவங்கள் இடம்பெறுதல் குறித்து எழுதுக.
8. தொன்மம் – குறிப்பு வரைக.

**பிரிவு – 3**

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) சமுதாயவியல் திறனாய்வின் பண்புகளையும் கோணங்களையும் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) திறனாய்வின் அடிப்படைப் பண்புகள் என்னென்ன? விவரிக்க.

2. (அ) சங்க இலக்கியம், பதினெண் கீழ்க்கணக்கு ஆகியவற்றின் உரைகள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) சைவ வைணவ இலக்கிய உரைகள் குறித்துக் கட்டுரை வரைக.

3. (அ) திறனாய்வின் தொடக்கம் குறித்தும், தொடக்க காலத் திறனாய்வாளர்கள் குறித்தும் விளக்குக.

(அல்லது)

(ஆ) ஈழத்துத் திறனாய்வாளர்கள் குறித்தும், திறனாய்வு நூல்கள் குறித்தும் விரிவாக எழுதுக.